

தருமபுரி மாவட்டத்தில் முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி மாவட்ட நிர்வாகம்,தகடூர் புத்தக பேரவை மற்றும் பாரதி புத்தகாலயம் ஆகியவை இணைந்து நடத்தும் 6ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார்,கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி. பழனியப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார்,தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி,மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு மதுரை கிழக்குத் தொகுதி சுந்தர்ராஜன் பட்டி இரணியம் பகுதியில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாநில இலக்கிய அணி செயலாளர் சி.நேரு பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாட்டு வண்டி பந்தயத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், ஆசைக் கண்ணன், வழக்கறிஞர் கலாநிதி, வடிவேல் முருகன், மதிவாணன், ஒத்தக்கடை சரவணன், சசிகுமார், மருது பாண்டியன், வீரராகவன் பொதும்பு தனசேகர், ரவிச்சந்திரன் கார்த்திக் ராஜா ராஜவேல் மீரா ஜான் விஷ்ணு பாண்டியன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் கிராமங்களில் வாழும்

# ஏழை, எளிய மக்களின் மீதுஅக்கறைகொண்டு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்!

## கீரமங்கலத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, அக்.7-

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் (04.10.2024) அன்று திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.



பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களின் மீது அதிக அக்கறை கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், கீரமங்கலம் பேரூராட்சியில், அயோத்திதாசர் பண்டிதர் திட்டத்தின்கீழ் பெரியார் நகரிலும், ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காசிம் புதுப்பேட்டை மற்றும் தாணான்புரம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.15 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதனைத் தொடர்ந்து, கீரமங்கலம் பேரூராட்சி, அறிவொளிநகர், நரிக்குறவர் காலனியில், மாநில நிதி பகிர்வு திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர் பிளாக் சாலை பணியினையும் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள இரண்டு வகுப்பறையுடன் கூடிய பள்ளி கட்டடப் பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சி திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், பேரூராட்சி துணைத் தலைவர் முத்தமிழ் செல்வி, வட்டாட்சியர்கள் பெரியநாயகி (ஆலங்குடி), திருநாவுக்கரசு (அறந்தாங்கி), அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சி.நளினி, ஆர்.எஸ்.குமாரவேலன், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆ.சுந்தரராஜன், கே.எஸ். ரவி, சர்வேயர் நடேசன் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

கடலூர், அக். 7 -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநகர, ஒன்றிய, நகர, பகுதி ,பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக சார்பணி அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய ,நகர, பகுதி, பேரூர் கழக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம், காட்டுமன்னார்கோவிலில், 01.10. 2024, மாலை 4 மணியளவில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், ,கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைப்பெற்றது.

இல்லம் தோறும் இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல மற்றும் திருத்தல் பணிகளை துரிதப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத்,

ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், கே.ஆர்.ராயர், தெ.காசிராஜன், எம்.மனோகர், பி.சுப்ரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், எஸ்.செந்தில்குமார், வி.ஜி. பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், சோழன், இர.விஜயசுந்திரம், பி.சுந்திர பாண்டியன், இரா.கலையரசன், வி.கோவிந்தசாமி, கே.ஆர். கே.கோவிந்தராஜ், காட்டுமன்னார்கோவில் ஒன்றிய பொருளாளர் ஜெயபாண்டியன்,

மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், இர.தமிழரசன், வி.பி. பாலு, எஸ்.பி.கண்ணன், வி.பி.வெற்றிவேல், இர. மஞ்சு,

வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், பகுதி செயலாளர்கள் எஸ்.பி.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, பேரூர் செயலாளர்கள் எஸ்.கணேசமூர்த்தி, க.பழனி, ப.மனோகரன், கே.வி.பி.சங்கர், கருணாநிதி,

மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி. கார்த்திகேயன், மாவட்ட இலக்கிய அணி டி.பழனிசாமி, துணை அமைப்பாளர் பி.வெங்கடாஜலபதி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தானூர் சிவக்கொழுந்து, மாவட்ட பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜாபர் அலி, மாணவர் அணி ஆர். சத்தியநாராயணன்,

துணை அமைப்பாளர்கள் ஏ.எம்.மதியழகன், விவசாய அணி பொன்.பன்னீர் செல்வம், மகளிரணி அமுதரணி, மகளிர் தொண்டரணி மனோரஞ்சிதம், சிறுபான்மை முகமது யூனுஸ் ஆதிதிராவிடர் அணி பரந்தாமன், மீனவரணி செல்வபாரதி, விளையாட்டு மேம்பாட்டு அணி சதீஷ்குமார், சிதம்பரம் நகரம் வெங்கடேசன், பாலு, இளங்கோவன், குறிஞ்சிப்பாடி கோகிலா குமார், பரங்கிப்பேட்டை தேன்மொழி சங்கர், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, தகவல் தொழில்நுட்ப அணி முத்தமிழ்செல்வன், வெற்றிச்செல்வன் உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், அக். 7 -

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (07.10.2024 - திங்கட்கிழமை) மாலை 05.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா. மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணைச் செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில்,



நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்துசார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

15.10.2024 அன்று நாமக்கல் மாநகரம், பரமத்தி சாலை செலம்ப கவுண்டர் பூங்காவின் தென்மேற்குப் பகுதியில் அமைத்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு மற்றும் பொம்மைகுட்டை மெட்டில் 20,000 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்டம் வழங்கும் விழாவிற்கும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்வருகை குறித்து.

கழகஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை வருகை தந்த உயர்கல்வி துறைஅமைச்சர் கோவி.செழியனுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில்!

மயிலாடுதுறை, அக். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசு நடத்தி வரும் கழகத்தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையில் உயர்கல்விதுறை அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்தார். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் கோவி. செழியனுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அமைச்சர் கோவி. செழியன் மயிலாடுதுறை ராணி மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து.மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அமைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, செல்லசேது.ரவிக்குமார், என்.இளையபொருமாள், மலர்விழிதிருமாவளவன்,ஞான.இமையநாதன், ப.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன்,பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், முத்துராஜா, எம். அன்புச்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், சுபா, எஸ்.வெற்றிவேல், சங்கரநாராயணன், பி.கென்னடி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் எம்.மகேந்திரன், ஜெயபிரகாஷ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, குத்தாலம் க.அறிவுசெல்வன், செல்வராஜ், வி.எஸ்.என்.செந்தில், இரா.முருகப்பா, வி.சௌமியன், இரா. மனோகரன், எஸ்.ராஜ்குமார், ஆர்.எஸ்.ஸ்ரீதர், காளி.தேசப்பன், கே.விக்னேஷ், வைத்தியநாதன், இரா.தன்ராஜ், காழி.கலைவாணன், பெரு.வீரமணி, எம்.எஸ்.முத்துகுபேரன், வெடி எஸ்.பாலமுருகன், தீபாசக்தியேந்திரன், எஸ். எம்.சம்சுதீன், இரா.முருகன், சாந்தி, கே.விக்னேஷ், வி.எஸ்.பிரபாகர், மாற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 144வது வட்டச் செயலாளரும் - சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினருமான ஏ.ஸ்டாலின் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 05.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கள்ளக்குறிச்சி,அக்.7-

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் வாக்காளர் சிறப்பு முகாம் வரும் 09.11.2024 (சனிக்கிழமை), 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), மற்றும் 23.11.2024 (சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

மாறிய இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் வாக்காளர்களும் 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், உளுந்தூர் பேட்டை தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) உடன் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.



திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பில் தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் உரிய பணி நியமன ஆணைகளை மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பராஜ், சி.என். அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் ஆகியோர் வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.